1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருவையாறு பேரூராட்சிக்குக் குடிநீர் வசதி

*4876 திரு. துரை சந்திரசேகரன் ;
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு பேரூராட்சிக்கு குடிநீர் வசதியை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

10—00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் ''வினாக்கள்—விடைகள் நேரம்'' சில மணித்துளிகள் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு பேரூராட்சி பகுதிக்கு சமீபத்தில் குடிநீர் வழங்கப்பட்டு இருக்கிறது. அதை ஹவுஸ் லைன் பைப் அமைத்து இல்லங்கள்தோறும் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த ஊருக்கான திட்டம் 50 இலட்ச ரூபாய் செலவில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு இப்போது முன்னோடித் திட்டமாக அங்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் வீடுகளுக்கும் அதனுடைய தொடர்பைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS